பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

12 02 2025 **WEDNESDAY** 12 40 **PM**

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரான்ஸ் நாட்டின் **Marseille** நகரில் அமைக்கப்பட்டுள்ள இந்திய துணைத் தூதரகத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று திறந்து வைக்கிறார்.

2. உற்பத்தி மற்றும் விநியோக கட்டமைப்பில் இந்தியா - பிரான்ஸ் இடையிலான ஒத்துழைப்பு வலுப்படுத்தப்பட வேண்டும் என்று வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

3. நாட்டின் முன்னேற்றத்தில் பெண்களின் பங்களிப்பு அதிக அளவில் உள்ளதாக மத்திய இணையமைச்சர் திருமதி. சாவித்ரி தாக்கூர் கூறியுள்ளார்.

4. காஸாவில் உள்ள பிணைக் கைதிகளை வரும் 15ஆம் தேதிக்குள் ஒப்படைக்காவிட்டால், ஹமாஸ் அமைப்பினருடனான போர் நிறுத்த ஒப்பந்தம் ரத்து செய்யப்படும் என்று இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ எச்சரித்துள்ளார்.

5. ஆசிய கலப்புக் குழு பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியா - **Macau** அணியை வென்றது.

**>>>>>>>><<<<<<<**

பிரான்ஸ் நாட்டின் **Marseille** நகரில் அமைக்கப்பட்டுள்ள இந்திய துணைத் தூதரகத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று திறந்து வைக்கிறார்.

பின்னர், **Mazargues** செல்லும் பிரதமர் முதல் மற்றும் இரண்டாம் உலகப் போரில் உயிர்நீத்த இந்திய வீரர்களின் நினைவுச் சின்னத்தில் அஞ்சலி செலுத்துகிறார்.

முன்னதாக பாரிஸ் நகரில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் கலந்து கொண்ட பிறகு **Marseille** சென்ற பிரதமருக்கு இந்திய வம்சாவளியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

**>>>>>>>><<<<<<<**

உற்பத்தி மற்றும் விநியோக கட்டமைப்பில் இந்தியா - பிரான்ஸ், இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையிலான ஒத்துழைப்பு வலுப்படுத்தப்பட வேண்டும் என்று வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

பாரிஸில் நடைபெற்ற இந்தியா – பிரான்ஸ் தொழில்துறை தலைமைச் செயலதிகாரிகளின் 14வது கூட்டத்தில் பேசிய அமைச்சர், செயற்கை நுண்ணறிவு மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பாதுகாப்பு உற்பத்தி மற்றும் விண்வெளி தொழில்நுட்பத்தில் இந்தியா – பிரான்ஸ் இடையிலான கூட்டு செயல்பாடு மேலும் வலுப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

இந்தியாவின் உள்கட்டமைப்பு வளர்ச்சியில் மாபெரும் மாற்றங்கள் நிகழ்ந்து வருவதாக தெரிவித்த திரு. ஜெய்சங்கர், புதிய வாய்ப்புகள் மூலமாக இந்திய மக்களின் வாழ்க்கை முறை மாற்றங்களை கண்டு வருவதாக குறிப்பிட்டார்.

>>>>>>>><<<<<<<

அயோத்தி ராமர் கோவில் தலைமை அர்ச்சகர் ஆச்சார்யா சத்யேந்திரதாஸ் இன்று உடல்நலக் குறைவால் காலமானார்.

கடந்த 3ஆம் தேதி உடல்நலக் குறைவு காரணமாக லக்னோவில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர், சிகிச்சை பலனின்றி இன்று காலை உயிரிழந்ததாக ராமஜென்ம பூமி அறக்கட்டளை அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆச்சார்யா சத்யேந்திரதாஸ் மறைவுக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இரங்கல் தெரிவித்துள்ளார்.

உண்மை மற்றும் பக்தியின் அடையாளமாக அவர் திகழ்ந்தாக தமது இரங்கல் குறிப்பில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>>><<<<<<<

இந்தியாவின் முன்னேற்றத்தில் பெண்களின் பங்களிப்பு அதிக அளவில் உள்ளதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி. சாவித்ரி தாக்கூர் தெரிவித்துள்ளார்.

சமூக மேம்பாடு தொடர்பாக நியூயார்க்கில் நடைபெற்று வரும் ஐ.நா. மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய அவர், பாலின வேறுபாட்டை களைந்து, டிஜிட்டல் மற்றும் நிதி மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி லட்சக்கணக்கான பெண் தொழில் முனைவோர், கிராமப்புற பகுதிகளில் உருவாகும் வகையில் மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார்.

வங்கிக் கணக்குடன் ஆதார் எண் மற்றும் மொபைல் எண்ணை இணைக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருவது சமூகத்தில் நலிவடைந்த பிரிவினரும் நாட்டின் நிதி செயல்பாட்டில் பங்கேற்க வகை செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

வறுமை ஒழிப்பு, ஊட்டச்சத்து மேம்பாடு மற்றும் சுகாதார மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிப்பதோடு நிலையான வளர்ச்சியை ஏற்படுத்தும் பயணத்தில் டிஜிட்டல் பொது கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளதாக திருமதி. சாவித்ரி தாக்கூர் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>>><<<<<<<

சுவாமி தயானந்த சரஸ்வதி பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் சுவாமி தயானந்த சரஸ்வதியின் பங்களிப்பு ஈடு இணையற்றது என்று தெரிவித்துள்ளார்.

குழந்தை திருமண முறையை ஒழிக்க பாடுபட்ட அவர், விதவை மறுமணத்திற்கு ஆதரவு அளித்ததாக அவர் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>>><<<<<<<

பெங்களூருவில் நடைபெற்று வரும் ஏரோ இந்திய விமான கண்காட்சியை ஒட்டி, அதில் பங்கேற்றுள்ள பல்வேறு நாடுகளின் உயரதிகாரிகளுடன் பாதுகாப்புத்துறை செயலர் திரு. ராஜேஷ்குமார் சிங் பேச்சு நடத்தினார்.

மொசாம்பிக், இலங்கை, சூரிநாம், நேபாளம், மொரீசியஸ், காங்கோ நாடுகளில் பாதுகாப்புத்துறை உயரதிகாரிகளை சந்தித்துப் பேசிய அவர், அந்நாடுகளுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து விவாதித்தார்.

>>>>>>>><<<<<<<<

ஜம்மு கஷ்மீரில் பாதுகாப்பை பலப்படுத்துவது குறித்து துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா தலைமையில் ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

ஜம்மு கஷ்மீர் பாதுகாப்பு தொடர்பாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் நேற்று ஆலோசனை கூட்டம் நடைபெற்ற நிலையில், திரு. மனோஜ் சின்ஹா இன்று பாதுகாப்புப் படையினருடன் ஸ்ரீநகரில் ஆலோசனை மேற்கொள்கிறார்.

எல்லைப்பகுதியில் ஊடுருவலை தடுப்பது, போதைப்பொருள் பயன்பாட்டை முற்றிலுமாக தடுத்து நிறுத்துவது, தீவிரவாத செயல்பாடுகளை வேரறுப்பது உட்பட பல்வேறு அம்சங்கள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>>><<<<<<<<

தில்லி பிஜேபி தேர்தல் மேலாண்மை குழுக் கூட்டம் தற்போது புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.

தில்லி பிஜேபி தலைவர் திரு. வீரேந்திர சச்தேவா, திரு. ராம்வீர் சிங் பிதூரி உள்ளிட்ட பலர் இதில் பங்கேற்றுள்ளனர்.

>>>>>>>><<<<<<<<

நாகை மாவட்டம், கோடியக்கரை வனவிலங்குகள் சரணாலயத்தில் தேசிய மாணவர் படையினர் தூய்மைப் பணியில் ஈடுபட்டனர்.

கோடியக்கரை வனவிலங்கு சரணாலயம் மற்றும் அப்பகுதியில் உள்ள சதுப்புநில பகுதிகளை பார்வையிட்ட மாணவ மாணவியர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து வனத்துறையினரிடம் கேட்டறிந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செல்வன் 40 செகண்ட்ஸ்)

>>>>>>>><<<<<<<<

மின்சக்தி தொடர்பான சர்வதேச மாநாடு தென்கொரியாவின் **Seoul** நகரில் இன்று தொடங்கியது.

அதிநவீன உயர் மின் சாதன பயன்பாடு, மின்விநியோகம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழில்நுட்பம் ஆகியவற்றை முன்னெடுத்து வரும் சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்றுள்ளனர்.

மின்சக்தி தொழில்நுட்பத்தில் செயற்கை நுண்ணறிவு பயன்பாடு குறித்தும், இம்மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது.

>>>>>>>><<<<<<<<

காஸாவில் உள்ள பிணைக் கைதிகளை வரும் 15ஆம் தேதிக்குள் ஒப்படைக்காவிட்டால், ஹமாஸ் அமைப்பினருடனான போர் நிறுத்த ஒப்பந்தம் ரத்து செய்யப்படும் என்று இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ எச்சரித்துள்ளார்.

டெல்அவிவ் நகரில் நடைபெற்ற இஸ்ரேல் அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின்னர் அவர் வெளியிட்டுள்ள காணொலிப் பதிவில், அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் பாதுகாப்புப் படை மிக தீவிரமாக போரிட்டு, ஹமாஸ் அமைப்பின் செயல்பாடுகளை முடிவுக்கு கொண்டுவரும் என்று அவர் கூறியுள்ளார்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை இஸ்ரேல் மீறி வருவதாகவும், அதனால் மீதமுள்ள இஸ்ரேல் பிணைக் கைதிகளை விடுவிப்பது ஒத்திவைக்கப்படக்கூடும் என்று ஹமாஸ் அமைப்பினர் தெரிவித்த நிலையில், இஸ்ரேல் இம்முடிவை வெளியிட்டுள்ளது.

**>>>>>>>><<<<<<<**

அஇஅதிமுக உள்கட்சி விவகாரம் குறித்து விசாரணை நடத்த தேர்தல் ஆணையத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நீதிபதிகள் திரு. ஆர். சுப்பிரமணியன், திரு. ஜி. அருள்முருகன் ஆகியோர் கொண்ட அமர்வு இன்று வழங்கிய தீர்ப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**>>>>>>>><<<<<<<**

ஆசிய கலப்புக் குழு பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியா - **Macau** அணியை வென்றது.

சீனாவின் **Qingdao** நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் 5-0 என்ற ஆட்டக்கணக்கில் இந்தியா வெற்றி பெற்றது.

**>>>>>>>><<<<<<<**

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 3வது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

அகமதாபாதில் இப்போட்டி பிற்பகல் மணி 1.30க்கு தொடங்குகிறது.

**>>>>>>>><<<<<<<**

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மும்பை – கோவா அணிகள் மோதுகின்றன.

மும்பையில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

**>>>>>>>><<<<<<<**

புரோ ஹாக்கி லீக் போட்டியில் பங்கேற்கவுள்ள இங்கிலாந்து அணி, புவனேஷ்வர் வந்தடைந்தது.

**>>>>>>>>END<<<<<<<<**